# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 02.09.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 15012/SCIC/2025**

திரு கா. மேகநாதன் மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/ ....... பொதுஅதிகார அமைப்பு
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
சத்தியமங்கலம்,
செஞ்சி வட்டம் 604 202
விழுப்புரம் மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 04.06.2025 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 01.07.2025 |
| 3. | மனுதாரரின் முதல்மேல்முறையீட்டு மனு | 15.07.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 21.07.2025<br>18.08.2025 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 03.10.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், சார்பதிவாளர் அலுவலகம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம் என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 04.06.2025

தேதியிட்டு அனுப்பிய மனுவில், 24.01.2019 தேதியிட்டு ஆவண எண்.1762/2019 என்பதற்கு தடை மனு தன்னால் வழங்கப்பட்டும் நடைபெற்ற ஆவணப்பதிவு குறித்து 8 இனங்களில் தகவல்கள் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி C.P. கவிதா, பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், சத்தியமங்கலம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்ட ஆவண எண்ணிற்கான பதிவு குறித்து தடை மனுவினை அளித்த பின்னரும் ஆவணப்பதிவு நடைபெற்றுள்ளது குறித்து 8 இனங்களில் தகவல்கள் வழங்குமாறு கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் 01.07.2025, 21.07.2025 ஆகிய தேதிகளிலும், அதன் பின்னர் இறுதியாக 18.08.2025 தேதியிட்டும் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட பதிலில் இனங்கள் 1,2,5,6 ஆகியவற்றிற்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர் இன்றைய விசாரணையின்போது ஆணையத்தின் முன் எடுத்துரைத்தார்.

4. **எனவே, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் மனுவில் கோரிய இனங்கள் 1,2,5,6 ஆகியவற்றிற்கு அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் திருத்திய / சரியான தகவல்களை 30.09.2026 தேதிக்குள் விரைவுத்தபால் மூலம் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல்துறையின் ஆதாரத்தினையும் 30.09.2026 அன்று ஆணையத்தில் நேரில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 15012/SCIC/2025</u>**

பெறுநர்
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
சத்தியமங்கலம்,
செஞ்சி வட்டம் 604 202
விழுப்புரம் மாவட்டம்.

**மனுதாரர்**
திரு கா. மேகநாதன்,
த/பெ காசிநாதன்,
எண்.3/72, பாடசாலை தெரு,
செத்தவரை கிராமம்,
நல்லாள்பிள்ளைபெற்றாள் அஞ்சல்,
செஞ்சி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் 604 152

TK/PS

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005